தரம் 03,04,05
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை தழுவிய தமிழ் மொழி கையேடு

ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

- லகர, ளகர,ழகர ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
- ரகர, றகர ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
- னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

ஆக்கம் :- S. வனிதமலர்

(ம.மா/ஹ.வ/ பெற்றோசோ.தமிழ் வித்தியாலயம்

S.VANITHA
www.lkedu.lk

ஒலி வேறுபாட்டுச் சொற்களை / வாக்கியங்களை எழுதுதல்

லகர, ளகர,ழகர ஒலி வேறுபாட்டுச் சொற்களும் பொருள்களும்

பலம் :- உறுதி
பழம் :- கனி

மலை :- குன்று
மழை :- மாரி

அழகு :- அன்னம்
அலகு :- சொண்டு
அளகு :- கோழி

கிலி :- பயம்
கிளி :- பறவை
கிழி :- கிழித்தல்

ஒளி :- பிரகாசம்
ஒழி :- நீக்கு / அழி
ஒலி :- ஓசை

வழி :- பாதை
வலி :- ஒரு நோய் / வலித்தல்
வளி :- காற்று

வாள் :- ஒருஆயுதம்
வால் :- ஒரு உறுப்பு
வாழ் :- வாழ்தல்

வெள்ளம் :- மழை வெள்ளம் / மிதமிஞ்சிய நீர் பெருக்கு
வெல்லம் :- இனிப்பு

விளா :- ஒரு மரம்
விழா :- கொண்டாட்டம்

நாங்கள் மலையில் ஏறினோம்.
நான் மலையில் ஏறினேன்

நேற்று இரவு மழை பெய்தது.
இன்று மழை பெய்தது.

S.VANITHA
www.ikedu.lk

உலவு :- உலவுதல்
உழவு :- பயிர்த்தொழில்

கலை :- வித்தை / ஆண்மான்
களை :- நீக்கு / பயன்படாத வேற்றுப்பயிர்

தலை :- சிரசு (உடல் உறுப்பு)
தழை :- தாவரமொன்றின் இலை

வேலை :- தொழில்
வேளை :- பொழுது

நீலம் :- ஒரு நிறம்
நீளம் :- அளவைக் குறிக்கிறது

புலி :- ஒரு மிருகம்
புளி :- கறிக்குப் பயன்படுவது

வலை :- மீன்பிடிக்கும் வலை
வளை :- புற்று, வீட்டு வளை

வாளை :- ஒரு வகை மீன்
வாழை :- ஒரு மரம்

வலை :- மீனவர்கள் **வலை** வீசி மீன்களைப் பிடித்தனர்.
வளை :- எறும்புகள் **வளைக்குள்** உணவினைச் சேகரித்து வைக்கின்றன.

நீலம் :- அவனுடைய சட்டை **நீல** நிறமானது
நீளம் :- அந்தப் பாலம் மிகவும் **நீளமானது**

மலை :- நாங்கள் மலைகள் உள்ள பிரதேசத்திற்குச்சென்றோம்.
மழை :- ஒரு மாதமாக மழை பெய்யவில்லை

VANITHA
www.lkedu.lk

பழுத்தது வாழை
வெடித்தது தாழை
பெட்டிதான் பேழை

தென்னையில் பாளை
வளர வேண்டும் மூளை
அடுத்த நாள் நாளை

ஆட்டும் நாய் வாலை
பொழுதும் எழும் காலை
முறுக்கிடு நூலை

அல்லி :- அல்லி மலர்
அள்ளி :- எடுத்தல்

பாலை :- நிலம், மரம்
பாளை :- தென்னம் பாளை

தோல் :- சருமம்
தோள் :- புயம்

வலம் :- வலப்பக்கம்
வளம் :- செழிப்பு

பாலம் :- ஆற்றுப்பாலம்
பாளம் :- துண்டு

வால் :- உறுப்பு
வாள் :- ஆயுதம்
வாழ் :- வாழ்தல்

அலை :- நிரை
அளை :- வளை, புற்று
அழை :- கூப்பிடு

இலை :- தாவர இலை
இளை :- இளைத்தல்
இழை :- நூல்

கலி :- துன்பம்
களி :- மகிழ்
கழி :- கழித்தல்

S.VANITHA
www.lkedu.lk

வலி :- நோவு
வளி :- காற்று
வழி :- பாதை

பாலம் :- நான் பாலத்தின் ஊடாக ஆற்றைக் கடந்தேன்.

பாளம் :- நாங்கள் தங்கப் பாளங்களைக் கண்டோம்.

சுரங்கத் தொழிலாளர்கள் தங்கத்தைப் பாளங்களாக வெட்டியெடுத்தனர்.

வலம் :- போக்குவரத்துப் பொலிசார் வலப்பக்கமாகச் செல்லுமாறு கூறினர்

வளம் :- விவசாயிகள் மண்ணை வளமாக்கினர்

மலர்கள் வளங்கள் பழங்கள்	வலிமை புளிப்பு வழிகள்	வலைகள் களைகள் பிழைகள்
கலங்கள் குளங்கள் கழகங்கள்	இல்லம் வள்ளம் விழிகள்	அகலம் பள்ளம் வழக்கம்

www.lkedu.lk

ரகர, றகர ஒலி வேறுபாட்டுச் சொற்களும் பொருள்களும்

அரம் :- ஒரு ஆயுதம்
அறம் :- தர்மம்

அரை :- இரண்டில் ஒன்று
அறை :- இல்லத்தின் ஒரு பகுதி

கரி :- அடுப்புக்கரி / யானை
கறி :- உணவு வகை

கரை :- கடற்கரை
கறை :- கறை படிதல்

கூரை :- வீட்டின் மேற்பகுதி
கூறை :- சேலை

நிரை :- வரிசை
நிறை :- பாரம் / நிரப்பு

பாரை :- ஒரு மீன் / ஒரு கருவி
பாறை :- கற்பாறை

பரவை :- பட்சி
பறவை :- கடல்

பாரை :- அம்மா பாரை மீன் வாங்கினார்
பாறை :- நான் கற்பாறையில் ஏறினேன்

கரை :- நாங்கள் ஞாயிற்றுக்கிழமை கடற்கரைக்குச் சென்றோம்
கறை :- அவனது சட்டையில் கறை படிந்திருந்தது.

S.VANITHA
www.lkedu.lk

அரி :- அரித்தல்
அறி :- தெரி, உணர்

அருகு :- விளிம்பு
அறுகு :- ஒரு புல்

இரக்கம் :- மனவுருக்கம்
இறக்கம் :- இறங்குகை, சரிவு

ஊரி :- ஒருவகைச் சங்கு
ஊறி :- கசிந்து

கூரியது :- கூர்மையுள்ளது
கூறியது :- கூறப்பட்டது

தெரி :- தெரிந்தெடு
தெறி :- துளித் துளியாக விசிறுதல்,பொத்தான்

பரி :- குதிரை
பறி :- பிடுங்குதல்

பொரி :- வறு,/ தானியம் பொரி
பொறி :- செதுக்கு, தீப்பொறி, எலிப்பொறி

பொரி :- அம்மா கத்தரிக்காயை வெட்டிப் பொரித்தார்
பொறி :- அவன் பொறி வைத்து எலியைப் பிடித்தான்

கரி :- யானையைக் கரி என்றும் கூறுவர்
கறி :- அம்மா பருப்புக் கறி சமைத்தார்

உரை :- அதிபர் பரிசளிப்பு விழாவில் உரையாற்றினார்.
உறை :- நான் கொப்பிக்கு உறை போட்டேன்

பரி :- சேவகர்கள் பரிகளுடன் சென்றனர்
பறி :- அவள் பூக்களைப் பறித்தாள்

அரி :- அவன் வாளால் மரத்தை அரிந்தான்.
அறி :- அவன் பத்திரிகைகளை வாசித்து செய்திகளை அறிந்து கொண்டான்

VANTHA
www.tkedu.lk

உரி :- உரித்தல்
உறி :- தூக்கு

உரை :- பேச்சு,உரைத்தல்
உறை :- கூடு,உறைத்தல்

கீரி :- பிராணி
கீறி :- பிளந்து

எரி :- நெருப்பு
எறி :- எறிதல்

எரிப்பு :- தீயால் எரித்தல்
எறிப்பு :- பிரகாசம், வெயில்,எறித்தல்

குரவர் :- பெரியோர்
குறவர் :- மலை வாழ் மக்கள்

திரை :- திரைச்சீலை
திறை :- வரி

கோரை :- புல்
கோறை :- ஓட்டை, பழுது

மரை :- ஒரு வகை விலங்கு
மறை :- வேதம், மறைத்தல்

துரவு :- கிணறு
துறவு :- துறத்தல்

கோரை :- அந்த வயலில் கோரைப்புற்கள் நன்கு வளர்ந்திருந்தன.
கோறை :- அந்த மரத்தில் ஒரு சிறிய கோறை உள்ளது

உரை :- அதிபர் காலையில் உரையாற்றினார்.
உறை :- பாலன் கடிதத்தை உறையில் இட்டான்

S.VANITHA
www.lkedu.lk

னகர, ணகர ஒலி வேறுபாட்டுச் சொற்களும் பொருள்களும்

அன்னம் - சோறு
அண்ணம் - உள் நாக்கு

ஆனி - ஒரு மாதம்
ஆணி - இரும்பு ஆணி

ஊன் - இறைச்சி
ஊண் - உணவு

கனை - ஒலி
கணை - அம்பு

பனி - குளிர்
பணி - தொழில்

பானம் - நீராகாரம்
பாணம் - அம்பு

மனம் - உள்ளம்
மணம் - வாசனை

வானம் - ஆகாயம்
வாணம் - மத்தாப்பூ

என் - எனது
எண் - இலக்கம்

நான் **ஆனி** மாதம் ஊருக்குப் போனேன்
நான் கடையில் **ஆணி** வாங்கினேன்.

ஆனி - நான் ஆனி மாதம் பிறந்தேன்
ஆணி - அவன் இரும்பு ஆணியை எடுத்தான்

கனி - கிளி கனிகளை விரும்பி உண்ணும்
கணி - சோதிடர்கள் கணித்துக் கூறுவர்

S.VANITHA
www.ikeau.lk

கனி - பழம்
கணி - கணித்தல்

கனை - கனைத்தல்
கணை - ஒரு ஆயுதம் (அம்பு)

தன்மை - குணம், மூவிடப் பெயர்
தண்மை - குளிர்மை

பன் - ஒரு வகைப் புல்
பண் - பாடலுக்குரிய ராகம்

பேன் - தலைப் பேன்
பேண் - காப்பாற்று

தினை - ஒரு தானியம்

திணை - சாதி, ஒழுக்கம்

கனி - தங்கை வாங்கிய கனிகள் நன்கு கனிந்திருந்தன.
கணி - சோதிடர்கள் வருட பிறப்பைக் கணித்துக் கூறினர்.

தனி - தனிமையைக் குறிக்கும்
தணி - தணித்தல், குறைத்தல்

நான் - தன்மைப்பெயர்
நாண் - கயிறு

கனம் - பாரம்
கணம் - கூட்டம், பொழுது

கோன் - அரசன்
கோண் - வளைவு

மன் - அரசன்
மண் - பாறை சிதைந்து உருவானது

S.VANITHA
www.lkedu.lk

பானம் - பருகுபவை
பாணம் - அம்பு

கனம் :- அவள் கொண்டு வந்த பொருள் கனமாக இருந்தது.
கணம் :- அந்த கணப்பொழுதை எளிதாக மறக்க முடியாது.

வண்ணத்துப்பூச்சிகளின் பிரதான உணவு அமுதம் ஆகும். பெரும்பாலும் அவை திரவ உணவையே உண்ணும். அவை கண்களைத் திறந்த படியே இரவில் ஓய்வெடுக்கின்றன.இவற்றின் இறக்கைகளில் அமைந்துள்ள நரம்பு மண்டலம் இறக்கைகளுக்குச் சக்தியைக் கொடுக்கின்றது. உலகின் பல பகுதிகளிலும் பல வண்ண வண்ணத்துப்பூச்சிகள் காணப்படுகின்றன.

வண்ணத்துப்பூச்சி
உணவு
பிரதான
உண்ணும்

திரவ உணவு
கண்கள்
வண்ண
உலகின்

நரம்பு மண்டலம்
ஓய்வெடுக்கின்றன
காணப்படுகின்றன
கொடுக்கின்றது

www.lkedu.lk